# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 03.08.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4420/SCIC/2024**

திருமதி R.மெட்டில்டா பிரீதி - புகார்தாரர்
க/பெ.திரு.ராஜ் அம்ப்ரோஸ்
153, 3வது நிழற்சாலை
கட்டம்-1, டாலர்ஸ் காலனி
வெங்கம்பாக்கம், சென்னை-600 127.
Phone:97544 65204.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
மத்திய குற்றப்பிரிவு
தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம்
(இ) சோழிங்கநல்லூர், சென்னை - 600 119.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **21.08.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.09.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 24.09.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 21/08/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், மத்தியக் குற்றப்பிரிவு, தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம், சென்னை-119 அவர்களுக்கு அனுப்பி, அதில் “தங்களது அலுவலக காவல் ஆய்வாளர் (AC-II, Team-II) அவர்கள் முன்பு மனுதாரர் R.மெட்டில்டா பிரீதி கணவருடன் 11/07/2024 நாளில் விசாரணைக்காக நேரில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தின் சான்றிட்ட உண்மை நகல் வழங்கவும்” என்பன போன்று 8(எட்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.R.மெட்டில்டா பிரீதி அவர்கள் ஆஜராகவில்லை. எனினும், அவரது சார்பில் அன்னாரின் பிரதிநிதியாக, உரிய அங்கீகாரக் கடிதத்துடன், அவரது கணவர் திரு.ராஜ் அம்ப்ரோஸ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.G.ஸ்டாலின், காவல் துணை ஆணையாளர், மத்தியக் குற்றப்பிரிவு, தாம்பரம் மாநகரக் காவல் ஆணையரகம், சென்னை-119 அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 19/09/2024 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரரின் பிரதிநிதி, தவறான அறிக்கை தமக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். **அவ்வாறு, தவறான அறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாகக் கருதினால், மனுதாரர், துறையின் உயர் அதிகாரிகளை அணுகி, தமது குறைகளைக் களைந்து கொள்ள வேண்டுமென ஆணையம் தெரிவித்துக் கொள்கிறது.** அதற்கு மனுதாரரின் பிரதிநிதி, ஏற்கனவே தாம் துறையின் உயர் அதிகாரிகளுக்கு மனு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 21/08/2024 தேதியிட்டு அனுப்பியுள்ள மனுவிற்கு, பொதுத் தகவல் அலுவலர் 19/09/2024 தேதியிட்டு, உரிய காலவரையறைக்குள் மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது. மனுதாரர் புகார் மனு அனுப்பியிருந்தாலும், அவரது சார்பாக ஆஜரான அவரது கணவர், தகவல்கள் குறித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005- சட்டப்பிரிவு 2(J)-ன் கீழ் ஆவணங்களை / பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டுமெனக் கோரியதன் காரணமாக, கீழ்க்கண்ட உத்தரவினை ஆணையம் பிறப்பிக்கின்றது. எனவே, மேற்சொன்ன சட்டப்பிரிவு 2(J)-ன் கீழ் பதிவேடுகளை / ஆவணங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்ய அனுமதிக்கும் வகையில், மனுதாரர் (அ) அவரது அங்கீகாரம் கடிதம் பெற்ற பிரதிநிதி, பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு (சோழிங்கநல்லூர்) 13/08/2026 அன்று காலை 11.00 மணிக்கு செல்ல வேண்டுமென்றும், அதற்கேற்ற வகையில் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ளவற்றிற்கு தொடர்பான பதிவேடுகளை / ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருந்து, மனுதாரரை பார்வையிடச் செய்ய வேண்டுமென்றும், அதன் பின்னர் அன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு நிறைவேற்றுகை அறிக்கையினை அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளர், மத்தியக் குற்றப்பிரிவு, தாம்பரம் மாநகரக் காவல் ஆணையரகம், சென்னை-119 அவர்கள், CCTV Footage தற்போது பராமரிப்பில் இல்லை எனத் தெரிவித்தார். அதற்கு ஆணையம், மனுதாரரின் பிரிவு 6(1)-க்கு தொடர்பான ஆவணங்கள் / பதிவேடுகள் எவையெல்லாம் பராமரிப்பில் உள்ளதோடு, அவற்றை மனுதாரர் (அ) அவரது பிரதிநிதி பார்வையிட்டு ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 4420/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
மத்திய குற்றப்பிரிவு
தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம்
(இ) சோழிங்கநல்லூர், சென்னை - 600 119.

**புகார்தாரர்**

திருமதி R.மெட்டில்டா பிரீதி
க/பெ.திரு.ராஜ் அம்ப்ரோஸ்
153, 3வது நிழற்சாலை
கட்டம்-1, டாலர்ஸ் காலனி
வெங்கம்பாக்கம், சென்னை-600 127.
Phone:97544 65204.

RG/Sr.PC